**<u>மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம்,</u>**

**<u>காட்டுமன்னார்கோயில்.</u>**

**சி.சி.98/2018**

2025 ஆம் ஆண்டு நவம்பவர் திங்கள் 06 ஆம் நாள் வியாழக்கிழமை

அ.சா.3 வாக்குமூலம் (ப.சா.4)

| | | | |
|---|---|---|---|
| **பெயர்** | செந்தில்குமார் | **ஊர்** | மேலணிகுழி |
| தந்தை **பெயர்** | ராஜகோபால் | **வட்டம்** | **காட்டுமன்னார்கோயில்** |
| **வயது** | **45** | **மாவட்டம்** | கடலூர் |
| **தொழில்** | | | |
| **காவல் நிலையம்** | | | |

**The Oaths Act 1969 (Act 44/1969)-ன் விதிமுறைகளின் படி 06.11.2025 நாளாகிய இன்று திரு. M.Sam Eugine Jebakumar, B.E.,B.L., காட்டுமன்னார்கோயில் மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர் அவர்களால் சாட்சியிடம் சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு சாட்சி விசாரணை செய்யப்பட்டார்**

**(1,7 எதிரிகள் ஆஜர்.2,3,4,5 எதிரிகள் ஆஜர் இல்லை.கு.வி.மு.ச.பிரிவு 317 ன் கீழ் மனுதாக்கல் செய்து அனுமதிக்கப்பட்டது. எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர். அரசுத் தரப்பு வழக்கறிஞர் ஆஜர்)**

**முதல் விசாரணை**

நான் மேலணிகுழி கிராமத்தில் வசித்து வருகிறேன். அ.சா.1 கவிதாவை தெரியும். ஆஜர் எதிரிகளையும், மற்ற எதிரிகளையும் தெரியும். சம்பவம் பற்றி தெரியாது. போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

**(அரசுதரப்பில் மேற்படி சாட்சியை பிறழ்சாட்சியாக அறிவிக்ககோரி அனுமதி கோரப்பட்டது. பரிசீலனை செய்யப்பட்டு அரசு தரப்பில் குறுக்கு விசாரணை அனுமதிக்கப்பட்டது. )**

**அரசு தரப்பு குறுக்கு விசாரணை**

போலீசார் விசாரணையில் 28.09.2017ந் தேதி காலை 11 மணிக்கு கவிதா என்பவருடைய வயலில் கடலூர் வேளாண்மை பொறியியல் துறை அலுவலகர்கள், சாட்சிகள் கார்த்திகேயன், கோபாலகிருஷ்ணன் ஆகியோர் ஆழ்துளை குழாய் போர் போட்டுக்கொண்டிருந்தப்போது எதிரிகள் சட்டவிரோதமாக போர் போடும் இடத்திற்கு வந்து 1வது சாட்சியை எதிரிகள் தகாத வார்த்தையால் திட்டி, தாக்கி, மிரட்டினார்கள் என்றும், போலீசார் விசாரணையில் சொல்லிவிட்டு சம்பவ நேரத்தில் சம்பவ இடத்தில் உடன் இருந்து சம்பவத்தை நேரில் பார்த்ததாக போலீசார் விசாரணையில் சொல்லிவிட்டு தற்போது எதிரிகள் ஊர்காரர்கள் என்பதால் அவர்களுக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை இல்லை.

சாட்சி விசாரணை முடிந்தது. மறுவிசாரணை இல்லை.